## 10th Social Science Lesson 19 Questions in Tamil - பொருளியல்

## 1] மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி - ஓர் அறிமுகம்

1) ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற அனைத்து பண்டங்கள் மற்றும் பணிகளின் அங்காடி மதிப்பை__________என்னும் பதத்தால் குறிப்பிடலாம்.

A) மொத்த உள்நாட்டு உற்பத்தி

B) மொத்த நாட்டு உற்பத்தி

C) மொத்த நாட்டு வருமானம்

D) இவை எதுவும் அல்ல

2) தொட்டு உணர முடியாத பொருளாதார நடவடிக்கைகள் பொருளியலில் எவ்வாறு குறிப்பிடப்படுகிறது?

A) பணிகள்

B) சேவைகள்

C) பண்டங்கள்

D) இவை எதுவும் இல்லை

3) இந்திய செலவாணிக்கு எது பயன்படுத்தப்படுகிறது?

A) டாலர்

B) யூரோ

C) ரூபாய்

D) யென்

4) கீழ்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 – ஒரு பண்டத்தையோ அல்லது பணியையோ அங்காடியில் விற்கவில்லை எனில் அதை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேர்க்க முடியாது.

கூற்று 2– எந்த ஒரு பண்ட, பணிகள் அங்காடியின் மதிப்பில் சேர்க்கப்படுகிறதோ, அது மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) ஆகும்.

A) கூற்று 1 மட்டும் சரியானது

B) கூற்று 2 மட்டும் சரியானது

C) இரண்டு கூற்றுகளும் சரியானது

D) இரண்டு கூற்றுகளும் தவறானது

5) கீழ்க்கண்டவற்றுள் எது மொத்த உள்நாட்டு உற்பத்தியை சாரும்?

I. தேனீர் கடையில் தேனீர் வாங்குதல்.

II. கணினி மையத்தில் தட்டச்சு செய்து வாங்குதல்.

III. கைவினை பொருளை விற்றல்.

A) I, II மட்டும்

B) I, III மட்டும்

C) II, III மட்டும்

D) இவை அனைத்தும்

6) இடைநிலை பண்டங்கள் என்பதின் பொருளை வரையறுத்த பொருளியல் வல்லுனர்கள் கீழ்க்கண்டவற்றுள் யார்?

I. டைலர் கோவன்

II. அலெக்ஸ் டாபர்ராக்

III. வில்லியம் ஸ்மித்

A) I, II மட்டும் சரியானது

B) II, III மட்டும் சரியானது

C) I, III மட்டும் சரியானது

D) இவை அனைத்தும் சரியானது

7) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானது எது?

கூற்று 1 – மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இறுதிநிலை பண்டங்கள் மட்டும் சேர்க்கப்படுகிறது.

கூற்று 2 – மொத்த உள்நாட்டு உற்பத்தி கணக்கிட இடைநிலை பண்டங்களை கணக்கில் எடுப்பதில்லை. ஏனெனில் அவற்றின் மதிப்பு இறுதிநிலை பண்டத்தில் சேர்க்கப்படுகிறது.

A) கூற்று 1 மட்டும் சரியானது

B) கூற்று 2 மட்டும் சரியானது

C) இரண்டு கூற்றுகளும் சரியானது

D) இரண்டு கூற்றுகளும் தவறானது

8) கீழ்க்கண்டவற்றுள் எது சரியான கூற்று ஆகும்?

கூற்று 1 – தேநீர் என்பது இடைநிலை பண்டமாகும்.

கூற்று 2 – தேநீரில் இருக்கும் சர்க்கரையானது ஒரு இடைநிலை பண்டமாகும்.

கூற்று 3 – தேனீர் விற்பது என்பது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அடங்கும்.

A) கூற்றுகள் 1, 2 மட்டும் சரியானது

B) கூற்றுகள் 2, 3 மட்டும் சரியானது

C) கூற்றுகள் 1, 3 மட்டும் சரியானது

D) கூற்று 1 மட்டும் சரியானது

9) ஒரு கோப்பை தேனீர் வாங்கும் போது கீழ்க்கண்டவற்றுள் எதன்மதிப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அடங்காது?

A) பால்

B) தேயிலை

C) சர்க்கரை

D) பாத்திரங்கள்

10) ______________ என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு ஆகும்.

A) தனி மனித வருமானம்

B) நாட்டு வருமானம்

C) தனிமனித + நாட்டு வருமானம்

D) மொத்த உள்நாட்டு உற்பத்தி

11) மொத்த நாட்டு உற்பத்தி எவ்வாறு குறிக்கப்படுகிறது?

A) GNP = C + I + G + (X–M) + NFIA

B) GNP = C + I + G + (X+M) + NFIA

C) GNP = C + I + G + (X–M) –NFIA

D) GNP = C + I + G / (X–M) + NFIA

12) கீழ்க்கண்ட கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 – மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது அந்த நாட்டு மக்களால் ஒரு வருடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் மதிப்பை குறிக்கும்.

கூற்று 2 – வெளிநாட்டு முதலீடு மூலம் ஈட்டிய லாபம் மொத்த நாட்டு உற்பத்தியில் அடங்காது.

A) கூற்று 1 மட்டும் சரியானது

B) கூற்று 2 மட்டும் சரியானது

C) இரண்டு கூற்றுகளும் சரியானது

D) இரண்டு கூற்றுகளும் தவறானது

13) நிகர நாட்டு உற்பத்தி எவ்வாறு குறிப்பிடப்படும்?

A) நிகர நாட்டு உற்பத்தி = மொத்த நாட்டு உற்பத்தி + தேய்மானம்

B) நிகர நாட்டு உற்பத்தி = மொத்த நாட்டு உற்பத்தி – தேய்மானம்

C) நிகர நாட்டு உற்பத்தி = மொத்த நாட்டு உற்பத்தி / தேய்மானம்

D) நிகர நாட்டு உற்பத்தி = மொத்த நாட்டு உற்பத்தி × தேய்மானம்

14) நிகர உள்நாட்டு உற்பத்தி எவ்வாறு குறிக்கப்படுகிறது?

A) நிகர உள்நாட்டு உற்பத்தி = மொத்த உள்நாட்டு உற்பத்தி + தேய்மானம்

B) நிகர உள்நாட்டு உற்பத்தி = மொத்த உள்நாட்டு உற்பத்தி × தேய்மானம்

C) நிகர உள்நாட்டு உற்பத்தி = மொத்த உள்நாட்டு உற்பத்தி / தேய்மானம்

D) நிகர உள்நாட்டு உற்பத்தி = மொத்த உள்நாட்டு உற்பத்தி – தேய்மானம்

15) இந்தியாவின் வறுமை மற்றும் ஒரு பிரிட்டிஷ் இல்லா ஆட்சி என்னும் புத்தகத்தை எழுதியவர் யார்?

A) சுரேந்திரநாத் பானர்ஜி

B) தாதாபாய் நௌரோஜி

C) பக்கிம் சந்திர சாட்டர்ஜி

D) அமரேந்திர பால் பானர்ஜி

16) பொருத்துக

I. மொத்த உள்நாட்டு உற்பத்தி – a) NDP

II. நிகர நாட்டு உற்பத்தி – b) GDP

III. மொத்த நாட்டு உற்பத்தி – c) NNP

IV. நிகர உள்நாட்டு உற்பத்தி – d) GNP

A) I–b, II–c, III–d, IV–a

B) I–a, II–d, III–b, IV–c

C) I–c, II–a, III–b, IV–d

D) I–d, II–b, III–c, IV–a

17) பொருத்துக

I. நிகர உள்நாட்டு உற்பத்தி – a) மொத்த நாட்டு உற்பத்தி – தேய்மானம்

II. நிகர நாட்டு உற்பத்தி – b) பண்டங்கள் + பணிகளின் மொத்த மதிப்பு

III. தலா வருமானம் – c) மொத்த உள்நாட்டு உற்பத்தி – தேய்மானம்

IV. மொத்த உள்நாட்டு உற்பத்தி – d) நாட்டு வருமானத்தை மக்கள் தொகையால் வகுத்தல்

A) I–c, II–a, III–d, IV–b

B) I–a, II–d, III–b, IV–c

C) I–c, II–a, III–b, IV–d

D) I–d, II–b, III–c, IV–a

18) மொத்த உள்நாட்டு உற்பத்தி = C + I + G + (X–M) + NFIA என்பதில் I என்பது எதை குறிக்கிறது?

A) நுகர்வோர்

B) முதலீட்டாளர்

C) அரசு செலவுகள்

D) வெளிநாட்டிலிருந்து ஈட்டப்பட்ட நிகர வருமானம்

19) செலவிட தகுதியான வருமானம் என்பதை கீழ்க்கண்டவற்றுள் எவ்வாறு குறிக்கலாம்?

A) தனிப்பட்ட வருமானம் + நேர்முக வரி

B) தனிப்பட்ட வருமானம் – நேர்முக வரி

C) தனிப்பட்ட வருமானம் + நேர்முக வரி + மறைமுக வரி

D) தனிப்பட்ட வருமானம் × நேர்முக வரி

20) கீழ்க்கண்டவற்றுள் எது சரியானது?

I. செலவிட தகுதியான வருமானம் = தனிப்பட்ட வருமானம் + நேர்முக வரி.

II. நுகர்வு முறையில் செலவிட தகுதியான வருமானம் = நுகர்வு செலவு + சேமிப்பு.

A) I மட்டும் சரியானது

B) II மட்டும் சரியானது

C) I, II இரண்டும் சரியானது

D) I, II இரண்டும் தவறானது

21) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 – காஷ்மீரில் உற்பத்தி செய்யப்பட்ட ஆப்பிளின் அங்காடி மதிப்பு GDPயில் சேர்க்கப்பட்டுள்ளது.

கூற்று 2 – கலிபோர்னியாவில் உற்பத்தி செய்யப்பட்ட ஆப்பிளின் அங்காடி மதிப்பு, இந்தியாவின் அங்காடியில் விற்பனை செய்தால், அது GDPயில் சேர்க்கப்படுகிறது

A) கூற்று 1 மட்டும் சரியானது

B) கூற்று 2 மட்டும் சரியானது

C) இரண்டு கூற்றுகளும் சரியானது

D) இரண்டு கூற்றுகளும் தவறானது

22) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 – காலாண்டு மற்றும் ஆண்டுதோறும் என இரண்டு வகையில் இந்தியாவின் GDP கணக்கிடப்படுகிறது.

கூற்று – 2017ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மிதிவண்டியை 2018 ஆம் ஆண்டின் GDPக்கு சேர்க்க முடியாது.

A) கூற்று 1 மட்டும் சரியானது

B) கூற்று 2 மட்டும் சரியானது

C) இரண்டு கூற்றுகளும் சரியானது

D) இரண்டு கூற்றுகளும் தவறானது

23) கீழ்க்கண்டவற்றுள் ஒரு நிதியாண்டு என்பதில் சரியானது எது?

A) ஏப்ரல் 2017 முதல் 2018 மார்ச் 31 வரை

B) ஏப்ரல் 2017 முதல் 2018 மார்ச் 1 வரை

C) ஏப்ரல் 2017 முதல் 2018 ஏப்ரல் 30 வரை

D) ஜனவரி 2017 முதல் 2018 டிசம்பர் 31 வரை

24) கீழ்க்கண்டவற்றுள் எது சரியானது?

A) முதலாவது காலாண்டு அல்லது Q1 – மார்ச், ஏப்ரல், மே

B) இரண்டாம் காலாண்டு அல்லது Q2 – ஜூன், ஜூலை, ஆகஸ்ட்.

C) மூன்றாம் காலாண்டு அல்லது Q3 – அக்டோபர், நவம்பர், டிசம்பர்

D) நான்காம் காலாண்டு அல்லது Q4 – டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி

25) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 – 2017–18ன் நிதி ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்ட பணிகளை அந்த ஆண்டில் GDP க்கு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

கூற்று 2 – Q2வின் GDP, Q2யில் உற்பத்தி செய்யப்பட்ட பண்ட பணிகள் மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

A) கூற்று 1 மட்டும் சரியானது

B) கூற்று 2 மட்டும் சரியானது

C) இரண்டு கூற்றுகளும் சரியானது

D) இரண்டு கூற்றுகளும் தவறானது

26) கீழ்க்கண்டவற்றுள் மொத்த உள்நாட்டு உற்பத்தி எவ்வாறு குறிக்கப்படுகிறது?

A) C + I + G + ( X – M)

B) C + I + G / ( X – M)

C) C + ( I – G) + ( X – M)

D) C – I + G + ( X – M)

27) GDP யின் நவீன கருத்து முதன் முதலில் யாரால் உருவாக்கப்பட்டது?

A) சைமன் ரூஷ்வால்ட்

B) சைமன் குஸ்நட்

C) சைமன் ஆண்ட்ரு

D) சைமன் ஜேக்கப்

28) மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வருமான கணக்கீட்டு முறை படி கீழ்க்கண்ட பதங்களுள் எது சரியானது?



winmeen.com

A) வருமானம் = கூலி + வாரம் + வட்டி + லாபம்

B) வருமானம் = கூலி + வாரம் – வட்டி + லாபம்

C) வருமானம் = கூலி + வாரம் + வட்டி – லாபம்

D) வருமானம் = கூலி + வாரம் – வட்டி – லாபம்

29) கீழ்க்கண்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பயன்களில் எது தவறானது?

A) இது பணவீக்கம் மற்றும் பணவாட்டம் சிக்கல்கள் பற்றி அறிய உதவுகிறது.

B) வாங்கும் திறன் மதிப்பீடு செய்வதற்கு இது உதவுகிறது.

C) உலகின் வளர்ந்த நாடுகளுடன் ஒப்பீடு செய்வதற்கு பயன்படுகிறது.

D) தனியார் துறை பற்றி அனைவரும் அறிந்து கொள்ள பயன்படுகிறது.

30) GDP பற்றிய கீழ்கண்ட கூற்றுகளில் எது சரியானது?

கூற்று 1 – சந்தையில் விற்கப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பு மட்டுமே மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அடங்கும்.

கூற்று 2 – சுத்தமான காற்று ஆரோக்கியமான வாழ்க்கைக்கு முக்கியமானது. எனினும் இதற்கு சந்தை மதிப்பு இல்லை.

A) கூற்று 1 மட்டும் சரியானது

B) கூற்று 2 மட்டும் சரியானது

C) இரண்டு கூற்றுகளும் சரியானது

D) இரண்டு கூற்றுகளும் தவறானது

31) எந்த காலகட்டங்களில் பள்ளிகள் மட்டும் வங்கிகளில் பந்து முனை பேனாக்கள் பயன்படுத்த அனுமதிக்கப்படவில்லை?

A) 1960களில்

B) 1970களில்

C) 1980களில்

D) 1990களில்

32) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறைபாடுகளுள் எது தவறான செய்தி ?

A) GDP யில் பல முக்கிய பண்டங்கள் மற்றும் பணிகள் சேர்க்கப்படவில்லை.

B) GDP அளவை மட்டும் அளவிடுகிறது.

C) GDP யில் நாட்டு வருமான பகிர்ந்தளிப்பு பற்றி கூறப்படவில்லை.

D) GDP தரத்தை மட்டும் அளவிடுகிறது

33) GDP கீழ்க்கண்டவற்றுள் இவற்றைக் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை?

I. மிகவும் குறைந்த சுகாதார நிலை

II. மக்கள் ஜனநாயகமற்ற அரசியலமைப்பு

III. அதிகமாக மற்றும் உயர் தற்கொலை விகிதம்

A) I, II மட்டும்

B) I, III மட்டும்

C) II, III மட்டும்

D) இவை அனைத்தையும்

34) GDP சம்பந்தப்பட்ட ஆவணங்களை பாதுகாப்பது எது?

A) மத்திய புள்ளியியல் அமைப்பு

B) மத்திய தகவல் தொலைத்தொடர்பு அமைப்பு

C) மத்திய நிதி நிர்வாக அமைப்பு

D) இவை எதுவும் அல்ல

35) மத்திய புள்ளியியல் அமைப்பு தொழில் துறையின் உற்பத்தியை ஆண்டு கணக்கெடுப்பு நடத்தி சில குறியீடுகளை வெளியிடுகிறது.அவ்வாறு வெளியிடப்படும் குறியீடுகளில் கீழே உள்ளவற்றில் எது சரியானது ?

I. தொழில்துறை உற்பத்தி குறியீடு – IIP

II. நுகர்வோர் விலைக் குறியீடு – CPI

III. புள்ளியியல் தகவல் குறியீடு – SIP

A) I, II மட்டும்

B) I, III மட்டும்

C) II, III மட்டும்

D) இவை அனைத்தும்

36) இந்திய பொருளாதாரம் பரவலாக மூன்று துறைகளாக பிரிக்கப்படுகிறது. அவற்றுள் தவறானது எது?

A) விவசாயத்துறை

B) தொழில்துறை

C) பணிகள் துறை

D) நிர்வாகத்துறை

37) இந்திய பொருளாதாரத்தின் வேளாண்மைத் துறையை எவ்வாறு அழைக்கலாம்?

A) முதன்மை துறை

B) இரண்டாம் துறை

C) மூன்றாம் துறை

D) கடைநிலை துறை

38) இரண்டாம் நிலைத் துறை என்று அழைக்கப்படும் தொழில் துறைகளில் அல்லாதது கீழ்க்கண்டவற்றுள் எது?
A) ஜவுளி, சணல் போன்ற தொழில்
B) சர்க்கரை, சிமெண்ட் போன்ற தொழில்
C) காகிதம், பெட்ரோலியம் போன்ற தொழில்
D) கால்நடை பண்ணைகள், சுரங்கங்கள் போன்ற தொழில்

39) மூன்றாம் நிலைத் துறை என்று அழைக்கப்படும் பணிகள் துறைகளுள் கீழ்க்காணும் எந்த தொழில்கள் அடங்கும்?
I. அரசு, அறிவியல் ஆராய்ச்சி, போக்குவரத்து போன்றவை.
II. வங்கி, கல்வி, தகவல் தொடர்பு போன்றவை.
III. வர்த்தகம், பொழுதுபோக்கு, சுகாதாரம் போன்றவை.
A) I, II மட்டும்
B) II, III மட்டும்
C) I, III மட்டும்
D) இவை அனைத்தும்

40) பொருத்துக
I. GDPயின் மதிப்பீடு – a) காடுகள் வளர்த்தல்
II. முதன்மை துறை – b) மத்திய புள்ளியியல் அமைப்பு
III. இரண்டாம் துறை – c) ஆட்டோமொபைல்ஸ்
IV. மூன்றாம் துறை – d) வர்த்தகம்
A) I–b, II–a, III–c, IV–d
B) I–b, II–d, III–c, IV–a
C) I–b, II–c, III–a, IV–d
D) I–b, II–c, II–d, III–a

41) நடப்பு விலையில் மொத்த மதிப்பு கூடுதலில் (GVA) பணிகள் துறைகள் 2018–2019ஆம் ஆண்டில் ___________ என மதிப்பிடப்பட்டுள்ளன.
A) 90.54லட்சம் கோடி
B) 92.34லட்சம் கோடி
C) 92.26லட்சம் கோடி
D) 95.47லட்சம் கோடி

42) இந்தியாவில் மொத்த மதிப்பு கூடுதலான 169.61 லட்சம் கோடியில், _____________ பணிகள் துறையின் பங்குகள் ஆகும்.
A) 52.30 %
B) 54.40 %
C) 55.67 %
D) 58.34 %

43) விவசாய பண்டங்களின் உற்பத்தியில் இந்தியா______________பெரிய நாடாகும்.
A) இரண்டாவது
B) மூன்றாவது
C) நான்காவது
D) ஐந்தாவது

44) கீழ்க்காணும் கூற்றுகளில் எது சரியானது?
கூற்று 1 – இந்தியா தொழில் துறையில் எட்டாவது இடத்தில் இருக்கிறது.
கூற்று 2 – இந்தியா பணிகள் துறையில் இரண்டாவது இடத்தில் இருக்கிறது.
A) கூற்று 1 மட்டும் சரியானது
B) கூற்று 2 மட்டும் சரியானது
C) இரண்டு கூற்றுகளும் சரியானது
D) இரண்டு கூற்றுகளும் தவறானது

45) இந்தியாவின் GDP யின் விவசாயத்துறை பங்களிப்பை பொருத்துக.
I. 2013–2014 ஆம் ஆண்டு – a) 17.09 %
II. 2015–2016ஆம் ஆண்டு – b) 17.01 %
III. 2016–2017 ஆம் ஆண்டு – c) 17.07 %
IV. 2017–2018ஆம் ஆண்டு – d) 18.20 %
A) I–d, II–c, III–a, IV–b
B) I–a, II–b, III–d, IV–c
C) I–c, II–a, III–b, IV–d
D) I–d, II–c, III–a, IV–b

46) இந்தியாவின் GDP யின் தொழில்கள் துறை பங்களிப்பை பொருத்துக.
I. 2013–2014 ஆம் ஆண்டு – a) 29.08 %
II. 2015–2016ஆம் ஆண்டு – b) 29.03 %
III. 2016–2017 ஆம் ஆண்டு – c) 29.01 %
IV. 2017–2018ஆம் ஆண்டு – d) 24.77 %
A) I–d, II–a, III–b, IV–c
B) I–a, II–b, III–d, IV–c
C) I–c, II–a, III–b, IV–d
D) I–d, II–c, III–a, IV–b

47) இந்திய பொருளாதாரத்தில் விவசாயத் துறையின் பங்களிப்பு உலக சராசரி ___________ விட அதிகமாக உள்ளது.

winmeen.com

A) 4.5 சதவீதம்.
B) 6.4 சதவீதம்
C) 7.5 சதவீதம்
D) 5.5 சதவீதம்
48) மொத்த மதிப்பு கூடுதல் எவ்வாறு குறிப்பிடப்படுகிறது?
A) மொத்த மதிப்பு கூடுதல் = GDP + மானியம் – வரிகள்
B) மொத்த மதிப்பு கூடுதல் = GDP + மானியம் + வரிகள்
C) மொத்த மதிப்பு கூடுதல் = GDP – மானியம் – வரிகள்
D) மொத்த மதிப்பு கூடுதல் = GDP – மானியம் – வரிகள்
49) பொருளாதார வளர்ச்சி என்பது பொருளாதார முன்னேற்றத்தின் ஓர் அம்சமாகும் என்பது யாருடைய கருத்து ஆகும்?
A) அமர்த்தியா சென்
B) ஆடம் ஸ்மித்
C) ஜான் வாக்கர்
D) இவர் யாருமல்ல
50) பொருளாதாரத்தின் உண்மையான முன்னேற்றத்தை அளப்பதற்கு எது முக்கியமாக கருதப்படுகிறது?
A) மனிதவள மேம்பாடு குறியீடு
B) மொத்த நாட்டு உற்பத்தி
C) தனி மனித வருமானம்
D) மொத்த நாட்டு வருமானம்
51) பொருளாதார வளர்ச்சி குறித்த தவறான கூற்று எது?
A) பொருளாதார வளர்ச்சி ஒரு குறுகிய கருத்து ஆகும்.
B) ஒரு குறிப்பிட்ட காலத்தில் பொருளாதாரத்தில் வெளியீட்டில் இது நேர்மறை அளவு மாற்றத்தை கொடுக்கும்.
C) இது வளர்ந்து வருகின்ற நாடுகளுக்குப் பொருந்தும்.
D) இதன் அளவீட்டு நுட்பங்கள் நாட்டு வருமானத்தை அதிகரித்தல் ஆகும்.
52) பொருளாதார முன்னேற்றம் குறித்த தவறான செய்தி எது?
A) பொருளாதார முன்னேற்றம் ஒரு பரந்த கருத்து ஆகும்.
B) பொருளாதார முன்னேற்றத்தின் அணுகுமுறை இயல்பானது தரத்தின் இயல்பு ஆகும்.
C) வாழ்க்கை எதிர்பார்ப்பு விகிதம், குழந்தை எழுத்தறிவு விகிதம் போன்றவை இதன் நோக்கங்கள் ஆகும்.
D) பொருளாதார முன்னேற்றம் என்பது ஒரு குறிப்பிட்ட காலம் நிகழ்வின் அதிர்வெண் கொண்டது.
53) வெளிநாட்டு நிறுவனங்களை இந்திய பொருளாதாரத்திற்குள் எந்த ஆண்டு முதல் இந்தியா அனுமதித்தது?
A) 1991ஆம் ஆண்டு முதல்
B) 1992ஆம் ஆண்டு முதல்
C) 1995ஆம் ஆண்டு முதல்
D) 1990ஆம் ஆண்டு முதல்
54) இந்தியாவில் கடந்த இரண்டு சகாப்தங்களாக GDP யின் நிலையான அதிக வளர்ச்சியால் கீழ்கண்டவற்றுள் எது அதிகரித்துள்ளது?
A) நாட்டு வருமானம்
B) தனிநபர் வருமானம்
C) மனிதவள மேம்பாடு
D) இது எதுவும் அல்ல
55) இந்தியா தனிநபர் வருமானத்தில்___________ நாடுகளின் பிரிவில் இடம் பிடித்துள்ளது.
A) நடுத்தர வருவாய்
B) உயர்தர வருவாய்
C) குறைந்த வருவாய்
D) மிகக் குறைந்த வருவாய்
56) இந்தியாவில் 5 வயதுக்குட்பட்ட____________ குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாடுடன் உள்ளனர்.
A) 44%
B) 40%
C) 50%
D) 56%
57) இந்தியாவில் 15 வயதும் அதற்கு மேலும் உள்ள மக்கள் தொகையில் _____________ கல்வியறிவு பெற்றவர்களாக உள்ளனர்.
A) 60%

B) 63%

C) 66%

D) 69%

58) இந்தியாவில் 35 வயதிற்கு உட்பட்ட விலைக்கும் வயதில் வேகமாக வளரும் மக்கள் தொகையில் இருப்போரின் எண்ணிக்கை என்ன?

A) 500 மில்லியன்

B) 600 மில்லியன்

C) 700 மில்லியன்

D) 800 மில்லியன்

59) மனிதவள மேம்பாட்டு குறியீடு எந்த நாட்டவரால் அறிமுகப்படுத்தப்பட்டது?

A) பாகிஸ்தான்

B) இந்தியா

C) ஜெர்மனி

D) பிரான்ஸ்

60) மனித மேம்பாட்டு குறியீடு (HDI) அறிமுகம் செய்யப்பட்ட ஆண்டு எது?

A) 1990

B) 1993

C) 1995

D) 1997

61) UNP யில் வெளியிடப்பட்ட மனித வளர்ச்சி மதிப்பீடுகளில் இந்தியா ______________ இடத்திற்கு உயர்ந்துள்ளது.

A) 120வது

B) 130வது

C) 140வது

D) 150வது

62) இந்தியாவில் 1990–2017 ன் இடைப்பட்ட காலத்தில் பிறப்பின்போது வாழ்நாள் எதிர்பார்ப்பு __________ ஆண்டுகள் அதிகரித்துள்ளது.

A) பதினோரு

B) பதினைந்து

C) பதினாறு

D) பதினெட்டு

63) இந்தியாவில் 1990 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் GSI வளர்ச்சி விகிதம் என்ன?

A) 245 சதவீதம்

B) 266 சதவீதம்

C) 280 சதவீதம்

D) 253 சதவீதம்

64) கீழ்காணும் இந்தியாவின் வேளாண் கொள்கைகளுள் தவறானது எது?

A) பொருளாதார நிலைத்தன்மை

B) சுற்றுச்சூழல் நிலைத்தன்மையும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு

C) வெளிநாட்டு பொருட்களுக்கான சந்தை அணுகல்

D) இடர் மேலாண்மை மற்றும் சரி செய்தல்

65) எந்த ஆண்டு முதல் பல தொழில்துறை கொள்கைகள் பெரிய அளவிலான தொழிற்சாலைகளுக்காக ஏற்படுத்தப்பட்டது?

A) 1945ஆம் ஆண்டு முதல்

B) 1948ஆம் ஆண்டு முதல்

C) 1952ஆம் ஆண்டு முதல்

D) 1957ஆம் ஆண்டு முதல்

66) மொத்த தேசிய மகிழ்ச்சி (GNH) என்பது எந்த அரசாங்கத்தை வழிநடத்தும் ஒரு தத்துவமாகும்?

A) நேபாளம்

B) பூட்டான்

C) வங்கதேசம்

D) இலங்கை

67) மொத்த தேசிய மகிழ்ச்சி (GNH) பூட்டான் அரசியலமைப்பால் எப்போது சட்டபூர்வமாக்கபட்டது?

A) 18 ஜூலை, 2008

B) 23 ஜூன், 2008

C) 16 ஆகஸ்ட், 2009

D) 11 டிசம்பர், 2009

68) மொத்த தேசிய மகிழ்ச்சி (GNH) என்ற வார்த்தையை உருவாக்கிய பூட்டான் மன்னர் யார்?

A) ஜாக்மே ஜிஹான்

B) ஜிக்மே சிங்கயே வாங்ஹக்

C) ஜுவான் ஜீபன்

D) இவர் யாரும் அல்ல

69) எந்த ஆண்டு ஐக்கிய நாடு சபை வளர்ச்சிக்கான ஒரு முழுமையான அணுகுமுறைக்கு மகிழ்ச்சி என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது?

A) 2011ஆம் ஆண்டு

B) 2013ஆம் ஆண்டு

C) 2015ஆம் ஆண்டு

D) 2017ஆம் ஆண்டு

winmeen.com

70) மொத்த தேசிய மகிழ்ச்சியின் நான்கு தூண்களாக கருதப்படுவனவற்றுள் தவறானது எது?
A) நிலையான மற்றும் சமமான சமூக பொருளாதார வளர்ச்சி
B) சுற்றுச்சூழல் பாதுகாப்பு
C) கலாச்சாரத்தை பாதுகாப்பதும் மேம்படுத்துவதும்
D) நிலையான ஆட்சி
71) மொத்த தேசிய மகிழ்ச்சியின் 9 கலங்கலாக கருதப்படுவனவற்றுள் கீழ்க்கண்டவகைகளில் எது தவறானது?
A) உளவியல் நலன்
B) உடல்நலம்
C) சேமிப்பு
D) சமூகத்தின் உயர்வு
72) இந்தியாவின் 2019-2020 ஆம் ஆண்டிற்க்கான GDP வளர்ச்சி விகிதம் ____________ என உலக வங்கி திட்டமிட்டுள்ளது.
A) 7.0 சதவீதம்
B) 7.5 சதவீதம்
C) 8.0 சதவீதம்
D) 8.5 சதவீதம்
73) 1970 மற்றும் 1980ஆம் ஆண்டுகளில் இந்தியாவின் சராசரி பொருளாதார வளர்ச்சி 8எவ்வளவாக இருந்தது?
A) 3.57
B) 4.41
C) 5.67
D) 6.75
74) பன்னாட்டு நிதி நிறுவனத்தின்(IMF) உலகப் பொருளாதார கண்ணோட்டம் 2018 ஆம் ஆண்டின்படி இந்தியாவின் GDP வளர்ச்சி விகிதம் எவ்வளவாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது?
A) 7.3 சதவீதம்
B) 7.5 சதவீதம்
C) 8.0 சதவீதம்
D) 8.3 சதவீதம்
75) பன்னாட்டு நிதி நிறுவனத்தின் உலகப் பொருளாதார கண்ணோட்டம்-2018 என்னும் அறிக்கை இந்தியா உலகின் ____________ மிக வேகமாக வளர்ந்து வருகின்ற நாடு எனவும் கூறுகிறது.
A) 3 வது
B) 4 வது
C) 5 வது
D) 6 வது

winmeen.com